# இளம்பரிதி

2008

இதழ் - 04



வெளியீடு:
கிழக்கு பல்கலைக்கழக விடுதி மாணவர் ஒன்றியம்
கிழக்கு பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பரிதி

## இதழ்–04

# 2008

இதழாசிரியர்

## ச.கோபிரமணன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகக் குழு

விடுதிக்காப்பாளர்
dr.m.m.மௌசுன்

உபவிடுதிக் காப்பாளர்கள்
திரு.சதீஸ்வரன்
திரு.V.ஜெயசீலன்

தலைவர்
S.பிரபாகரன்

செயலாளர்
N.பிரசாந்

உபசெயலாளர்
S.கிருசாந்

பொருளாளர்
V.பவாகரன்

உறுப்பினர்கள்
V.திருக்கேதீஸ்வரன்
4ம் வருடம்

p.யோகரூபன்
3ம் வருடம்

M.சுதன்
1ம் வருடம்

## நிர்வாகக் குழு பெண்கள் விடுதி

cgtpLjpf; fhg;ghsh;fs;

C.G. தேவதாசன்
S. சந்திரகுமார்
N. தவபிரபா
M.பிரேமலதா

தலைவர்
S. கௌசல்யா

செயலாளர்
M. அருளானந்தி

பத்திராதிபர்
S.விஜயபிறெவ்பி

பொருளாளர்
D.மேரிநிசாந்தி

உறுப்பினர்கள்
T.கோமதி
P.சத்தியப்பிரியா
A.சரண்யா
K.கெதரின்
K.பியூறா

*அட்டைப்படம்*
ச.கோபிரமணன்
விருகை வருடம்
தமிழ்சிறப்பு

*தட்டச்சு*
ச.கோபிரமணன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப வேந்தரின் வாழ்த்துச்செய்தி..............

கிழக்குப் பல்கலைக்கழக விடுதி மாணவர்களின் உள்ளகக் கிடக்கைகளை கதைகளாக கவிதைகளாக அரங்கேற்றும் அரங்கேற்றும் ஒரு களமாக இளம்பரிதி சஞ்சிகையுள்ளது. வருடத்தின் ஒரு முறை மாணவர்களின் பல ஆக்கங்களைக் கொண்டு வெளிவரும் இச்சஞ்சிகையின் வெளியீடு மாணவர்களின் இரவு விழாவில் அமைவது ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

எவ்வாறெனினும் புதிய சஞ்சிகை ஆசிரியர்களின் புதிய படைப்பாளிகளின் ஆக்கங்களை தாங்கி இவ்வருடம் கதிர் விரித்திடும் இளம்பரிதியின் வெற்றிக்கு பின்னின்று உழைத்திட்ட அனைவருக்கும் எமது வாழ்த்துக்களும் ஆசிகளும்.

*கலாநிதி என் பத்மநாதன்*

உப வேந்தர்

VICE-CHANCELLOR
EASTERN UNIVERSITY, SRI LANKA

20.01.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

வாழ்க்கை என்னும் ஓடத்தில் மாணவப் பருவம் என்பது மிகவும் சுவாரசியமானது. அதிலும் வளாக வாழ்க்கை மிகவும் இனிமையானது. விடுதி வாழ்க்கை பல பிரத்தியேக அனுபவங்களையும், ஆற்றல்களையும் நல்ல சமூக விழுமியங்களையும் விருத்தி செய்வதற்கு நல்ல களம் அமைத்துக் கொடுக்கின்றது. எமது விடுதிகளைப் பொறுத்த வரையில் பல இன, மத மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இவர்கள் ஒற்றுமையாகவும், விட்டுக் கொடுப்புடனும் வாழ்கிறார்கள். ஒவ்வொரு மாணவ மாணவிகளும் தமது திறமைகளையும், எதிர்பார்ப்புக்களையும் ஊக்கங்களையும் வெளிக் கொணர்வதற்கு இந்நூல் ஒரு உந்து சக்தியாக அமைகின்றது.

விடுதி மாணவர்களின் வெளியீடாகிய இளம்பரிதி இதழ் இந்த ஆண்டும் வெளிவருவதில் மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்தும் பல்வேறு காத்திரமான ஆக்கங்களைத் தாங்கி இச் சஞ்சிகை வெளிவர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

*சாமினி சாந்தகுமார்,*
*உபவிடுதிக் காப்பாளர்,*
*பெண்கள்விடுதி.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

இளம்பரிதி நான்காவது இதழாக இவ்வருடம் வெளிவருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி. கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களது திறமைகளை வெளிக்கொணரும் பல சஞ்சிகைகள் இருப்பினும் இவ்விதழ் விடுதி மாணவர்களது ஆக்கங்களை மட்டும் கொண்டு வெளிவருவது சிறப்பானதாகும். மிகக் குறுகிய காலத்தில் சந்தர்ப்ப வசத்தால் இளம்பரிதியின் ஆசிரியப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. வெளிவராமல் இருந்து விடுமோ என்ற நிலையில் இருந்த இச் சஞ்சிகைக்கு என்னால் முடிந்தவரை உயிர் கொடுத்துள்ளேன். கூடுதலாக கிடைக்கப் பெற்ற ஆக்கங்களை முழுவதுமாக சேர்க்க முனைந்துள்ளோம். கடைசி வரை தோளோடு தோள் நின்று இளம்பரிதி வெளிவர துணை நின்ற அனைவருக்கும் எமது நன்றிகள். குறுகிய காலப்பகுதியில் வாழ்த்துரைகளை வழங்கிய உபவேந்தர் அவர்களுக்கும் உப விடுதிக்காப்பாளப் அவர்களுக்கும், ஆக்கங்களை தந்த படைப்பாளிகளுக்கும் மிக குறுகிய காலத்தில் இச் சஞ்சிகையை அச்சிட்டு உதவிய மடோனா அச்சகத்தினருக்கும் அதன் ஊழியர்களுக்கும், எமது இதய பூர்வமான நன்றிகள்.

*ச.கோபிரமணன்*
*ஆசிரியர்*
*இளம்பரிதி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்காக...



வீதியிலே நீ நடக்க
பசும் புற்கள் பாதரட்சை...!
இரவிலே நீ உறங்க
வெண்முகில்கள் பஞ்சு மெத்தை...!
கவிதைகள் நீ வடிக்க
புதுப் பேனாவாய் புஸ்பங்கள்!
தாகமென்றால் நீ அருந்த
பரிசுத்த பனித்துளிகள்!
குமரி நீயோ நீராட
குதூகலிக்கும் குற்றாலம்!
பூவே உன்னுடல் வியர்த்தால்
காற்று வரும் கரை புரண்டு...
தேவி உன் கால் நனைக்க
வந்ததொரு சுனாமி அலை.

கி. நிமல்சஞ்ஜயன்,
புவியியல் சிறப்புக் கற்கை,
மூன்றாம் வருடம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏங்கிய இதயங்கள்

அந்தி மாலை நேரம் அமைதியான காற்று... சில்லென்று மேனியை வருடும் தென்றல்... கடலோரக் கவிதைகள் கடலின் கரையின் மீது அலையின் காதல் இவையனைத்தையும் ரசித்துக் கொண்டிருந்த வானதியின் மனம் தனது கனாக்காலங்களை நினைத்துக் கரைந்தோடத் தொடங்கியது.

அன்று வெள்ளிக்கிழமை வானதி ஆலயத்திற்குச் சென்று தனது நண்பி நிலாவுடன் பாதையில் நடந்து வந்து கொண்டிருந்தாள். அப்போது திடீரென ஒரு சத்தம் திரும்பிப் பார்த்த வானதிக்கு கோபம் கண்களை முட்டியது. அப்படி என்னதான் நடந்தது. அங்கு ஒரு காரில் வந்த இளைஞன் ஒரு வயோதிபரை இடித்து விட்டான். உடனே ஓடிச் சென்று விழுந்த வயோதிபரை தூக்கிவிட்ட வானதி காரில் இருந்தவனை நோக்கி பேசத் தொடங்கினாள். காரிலிருந்து இறங்கி வந்தவனை நோக்கி மிஸ்டர் உமக்கு கண் தெரியாதா? என்று வார்த்தைகளை வீசினாள்... வானதியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவன் தன்னை மறந்து அவள் உதடுகள் அசையும் திசைகளை எண்ணிக் கொண்டிருந்தான். குவளை மலர் போன்ற அவள் கண்கள், குழந்தை போன்ற அவள் பேச்சு என்பவற்றில் மனதைப் பறி கொடுத்தவன் சுய நினைவுக்கு வந்தவனாக'ஹலோ... நீங்க கோபத்தில கூட அழகாக இருக்கிறிங்க... உங்கள எனக்குப் பிடிச்சிருக்கு... என்றான். இதனைக் கேட்ட வானதியின் முகம் அந்தி வானத்தின் செம்மையினைத் தனதாக்கிக் கொண்டது. வானதி தன் உணர்வை வெளிக் காட்டாமல் மிஸ்டர் நான் என்ன கேட்கிறன் நீர் என்ன சொல்றீர்... எனக் கோபப்பட்டாள்.

சரி...சரி... ஐயம் ரியலி சொறி... எனிவே நான் ஆனந். இந்த ஊர்லதான் கொஸ்பிட்டல்ல டொக்டராக இருக்கிறன். உங்கட பெயரை நான் தெரிஞ்சுக்கலாமா...? என்றான். வானதி எனக்கு அம்மா பேர் வைக்கல்ல வாடி போகலாம் என நிலாவைக் கூட்டிக் கொண்டு வீடு நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

ஆனந்துக்கு அன்று முழுவதும் தூக்கமில்லை. புரண்டு புரண்டு படுத்தாலும் வானதியின் முகத்தை மறக்க முடியவில்லை. தன் வருங்கால மனைவி இவள் தான் என்ற முடிவோடு உறங்கிப் போனான். எவ்வித சலனமும் இல்லாமல் தூங்கியெழுந்த வானதிக்கு வீட்டு வாடகை கொடுக்க வேண்டியதும் தங்கைக்கு பரீட்சைக்காக பணம் கட்ட வேண்டியதும் ஞாபகத்துக்கு வந்தன. இவ்வாறான இக்கட்டான நேரங்களில் எல்லாம் வானதி தனது தந்தையைத் திட்டத் தொடங்குவாள். தந்தையோ காதலித்து திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளை தாய்க்கு சுமையாக்கி விட்டு வேறு வாழ்க்கையை தேடிக் கொண்டது வானதிக்கு கோபத்தையே வரவழைத்தது. தாயின் கட்டுப்பாட்டில் வளர்ந்த வானதி பல்கலைக்கழக படிப்பை முடித்து இன்று ஆசிரியையாக பணியாற்றுகிறாள். எனினும் அவளது வருமானம் குடும்பத்தைக் கொண்டிழுக்கப் போதுமானதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியான அழகுடைய வானதி ஆடம்பரமில்லாமலே வாழ்ந்தாள்.
நேரம் காலை ஏழு மணியாகி விட்டது. வானதி தனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு தனது வேலைக்குச் சென்றாள். வானதியின் நினைவிலிருந்த ஆனந்துக்கு அவளைப் பற்றிய அனைத்து விடயங்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஓடியது. இதனால் தீவிரமாக விசாரித்து வானதியின் குடும்ப நிலை, அவளது மனநிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வானதி ஆண்களை நம்பமாட்டாள் அதிலும் பணக்கார ஆண்களை அறவே நம்ப மாட்டாள் என்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் அந்த அழகு தேவதையை அவனால் இலகுவில் மறந்து விட முடியாதிருந்தது..
அன்று மாலை வானதியின் வருகைக்காக காத்திருந்த ஆனந் வானதியைக் கண்டதும் நிலை தடுமாறிப் போனான். பேச நினைத்திருந்தவை எல்லாம் மறந்து போனது. சந்திக்க நினைப்பதும் பயத்தில் தழிவதுமாக மாதம் ஒன்று கடந்தது.
இந்த நிலையில் ஆனந்தின் காதலை புரிந்து கொண்ட அவன் பெற்றோர் வேறு இடத்தில் ஆனந்துக்குப் பெண் பார்த்தனர். இதனை தடுக்க எண்ணியவன் தன் காதலை பெற்றோரிடம் கூற அவர்கள் ஆனந்தின் காதலுக்கு எதிர்பே தெரிவித்தனர். இந்த நிலையில் கடைசியில் ஆனந் வீட்டை விட்டு வெளியேறினான். தனது காதலை எப்படியாவது வானதியிடம் சொல்லிவிட வேண்டும் என எண்ணிய ஆனந் ஒரு நாள் அவள் அருகில் சென்று 'லோ நான் உங்களிடம் ஒரு நிமிடம் பேசலாமா? ப்ளீஸ்... ப்ளீஸ்..... வானதி நான் என்று உங்கள பார்த்தனோ அன்றே நான் உங்கல லவ் பண்ண ஆரம்பிச்சிட்டன். நீங்க தான் எனக்கு வாழ்க்கைத் துணையாக வரனும் நீங்க இல்லாமல் என்னால வாழ முடியாது. இதை ஒவ்வொரு முறையும் உங்களிடம் சொல்ல வரும் போதும் ஏதோ ஒன்று என்னைத் தடுத்துவிடும். உங்களுக்காக என் குடும்பத்தையே விட்டுட்டு வந்திருக்கிறன். வானதி ப்ளீஸ் என்னப் புரிஞ்சு கொள்ளுங்க என்று கூறி விட்டு அவ்விடத்தை விட்டு ஆனந் நகர முயல வன் நிமிட் நீங்க நினைப்பதெல்லாம் ஒரு போதும் நடக்காது. என்ர குடும்ப நிலை உங்கட குடும்பத்தோட ஒரு போதும் ஒத்துப் போகாது. இன்றைக்கு மட்டுமில்ல என்றைக்கும் நான் உங்கள காதலிக்க மாட்டன். உங்க மேல எப்போதுமே எனக்குக் காதல் வராது. தயவு செய்து என்னை விட்டு விலகிடுங்க. என்று கூறிய வானதி தன் வீடு நோக்கி நடக்கத் தொடங்கினாள். அதன் பின்பு பல முறை வானதி வானதி என ஆனந் பின்னுக்குத் திரிந்தாலும் வானதி திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.
ஆறு மாதங்களாக ஆனந்தின் முயற்சிகள் தொடர்ந்தன. ஆனந்தின் நிலை நாளுக்கு நாள் மோசமாகியது. சரியாகச் சாப்பிடுவதில்லை, தூங்குவதில்லை உடல் மெலிந்தது. ஆனந்தின் நிலையை அறிந்த அவனின் தாய் வானதியைச் சந்தித்து ஆனந்தின் உண்மையான காதலைப் புரிந்து கொண்டு தன் மகனுக்கு வாழ்வு தரும்படி கெஞ்சினாள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதுவரை கலங்காமல் இருந்த குட்டை கொஞ்சம் கொஞ்சமாகக் குழம்பத் தொடங்கியது. வானதியின் மனதில் ஆனந்தின் நினைவுகள் மலரத் தொடங்கின. அவளும் அவனை நேசிக்கத் தொடங்கினாள். ஒவ்வொரு தினமும் ஆனந்தைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. ஆனந்தின் ஆழமான காதலை தன் தாயிடம் கூறினாள். உனக்குப் பிடிச்சிருந்தா அந்தத் தம்பியை வந்து பேசச் சொல்லம்மா என்றாள் வானதியின் தாய். இந்த செய்தியை ஆனந்திடம் சொல்ல அவனின் மருத்துவமனைக்குச் சென்ற வானதி அங்கு அவன் இல்லாததால் அங்கிருந்த ஒருவரிடம் ஒரு கடதாசியை கொடுத்துவிட்டுச் சென்றாள்.

அரை மணி நேரத்தின் பின் வந்த ஆனந்திடம் கடிதம் கொடுக்கப்பட்டது. அதில் ஆனந் நான் உங்கள் அன்பைப் புரிந்து கொண்டேன். உங்களை நீண்ட காலம் துன்புறுத்தி விட்டேன். இனி மேல் உங்களுக்கு அந்தக் கவலை இல்லை. நீ + நான் = நாம். மாலை கடற்கரையில் உங்களுக்காகக் காத்திருப்பேன். என்று இருந்தது. இதனை வாசித்தவுடன் இது கனவா நினைவா என தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டான் ஆனந். துள்ளிக் குதித்துக் கொண்டு மகிழ்ச்சியில் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். வானதி பற்றிய நினைவுகளுடன் காரைச் செலுத்தினான். வானதிக்காக வாங்கிய கால் கொலுசு பக்கற்றில் சலசலத்தது. வானதியின் நினைவுகளோடு சென்றவன் எதிரே வந்த லொறியைக் கவனிக்கவில்லை. கண்ணிமைக்கும் நேரத்துள் லொறி காரைப் பதம் பார்த்தது. நிமிடத்துள் எல்லாம் நடந்து முடிந்திருந்தது. அருகில் இருந்தவர்களால் ஆனந் மருத்துவமனைக்கு தூக்கிச் செல்லப்பட்டான். கடற்கரையில் காத்திருந்த வானதிக்கு செய்தி காதை எட்டியது. அலறியடித்துக் கொண்டு ஓடினாள் வானதி. இரண்டு மணித்தியால பரபரப்பின் பின் மருத்துவர் வானதியிடம் மன்னித்துக் கொள்ளம்மா என்னால முடியல என்று கையை விரித்தார். ஆனந்துக்கு மண்டையில் பலமான அடி பட்டிருந்ததால் அவன் சுயநினைவை இழந்திருந்தான். அவன் பழைய நிலைக்கு வரலாம் அல்லது சில சமயம் வராமலும் போகலாம் என்று கூறிய மருத்துவர் இது அவரது கைகளில் இருந்தது இந்தாங்க என்று கொலுசுகள் இரண்டையும் கொடுத்தார்.

திடீரென கடலலை பெருஞ்சத்தத்துடன் ஒருமுறை கரையை மோதியது. சத்தம் கேட்டு பழைய நினைவுக்கு மீண்ட வானதிக்கு ஆனந்துக்கு மருந்து கொடுக்கனும் என்ற நினைவு வந்தது. தனது வீட்டை நோக்கி புறப்பட்டாள். அன்றிலிருந்து இன்றுவரை இரண்டு வருடங்களாகியும் ஆனந்தை தாயாகவும் மனைவியாகவும் ஆதரித்து வருகிறாள். வானதி ஆனந்திற்கு என்றோ ஒரு நாள் நினைவு திரும்பும் என்ற நம்பிக்கையில் இன்று எத்தனை பேருக்கு இருக்கும் இந்த மனம் நம்பிக்கை.

*சோ.கிருஸ்ணவேணி,*
*1ம் வருடம்,*
*கலைப்பீடம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகப்பிரசவம்

வெறுத்துப் போகிறது
வாழ்க்கை
எங்கு பார்த்தாலும்
கொலையும் கொள்ளையும் கற்பழிப்பும்
எதைக் கேட்டாலும்
குண்டு வெடிப்பும் மரணத்தின் ஓலங்களும்...
சுதந்திரமாய் கடை சென்று
பாணும் பருப்புக் கறியும்
ஒரு கோப்பைத் தேனீரும்
அருந்திவிட்டு வரமுடியவில்லை
போகும் போதோ வரும் போதோ
வன்முறை வலையில் என்னை
அறியாமலே நான் சிக்கிவிடக் கூடும்.
சமகாலம் பற்றி எழுது என்கிறார்
என் ஆசிரியர்
என்னை அறியாமலேயே
ஒரு வரியாகவோ ஒரு சொல்லாகவோ
குருதியும் வன்முறையும்
விழுந்து விடுகின்றன.
மீண்டும் என்னைத் திட்டுகிறார்
இவை தவிர் இவை சேர்.....
எல்லாம் புரிந்து கொண்டவனாய்
தலையசைத்து விடைபெற்று
வீதியில் இறங்குகிறேன்
கண்முன்னேயே படபட படபட
வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன
காகங்கள் வேகமாய் பறக்க
இரு உடல்கள் குருதியுடன்
மண்ணில் சரிகின்றன
வெள்ளைத்தாளில் ஆசிரியர் சொற்படி
எழுத முனைகிறேன்
கண்களுக்குள் குருதி தான் தெரிகிறது
எழுதுகோல் எழுத மறுத்து
வன்முறை காட்டுகிறது
மேசையில் பாரதியும் விவேகானந்தரும்
புன்னகைக்கிறார்கள்
முடித்துவிட்டேன் ஒரு பிரசவம்
தேடித்தேடிப் பார்க்கிறேன்–இல்லை
இந்தக் கவிதையில் குருதியும் வன்முறையும்
சந்தோச வெள்ளத்தோடு
பயணப்படுகிறேன் ஆசிரியர் வீடு நோக்கி
இரவு நடந்த குண்டு வெடிப்பில்
ஆசிரியர் சிறு காயத்தோடு
மருத்துவமனையில்...!

*சு.சாரங்கா,*
*1ம் வருடம்,*
*கலைப்பீடம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ மர நிளலில..........

அந்த அழகிய குட்டி கிராமத்தின் எல்லை முடிவில் மிகவும் பசுமையுடன் அடர்ந்து விரிந்த கிளைகளுடன் ஓர் ஆலமரம் காணப்பட்டது. அது தனது விழுதுகளினால் தன்னை தாங்குவதுடன் தனது நிழலினால் தன்னிடத்தில் ஒதுங்குபவர்களையும் தாலாட்டியது. மனிதர்கள் மட்டுமன்றி பறவைகள் கூட அந்த ஆலமரத்தில் இளைப்பாறி செல்வது வழமை. அதே ஆலமர நிழலில் விழுதினைப் பிடித்த வண்ணம் தன்னையே மறந்து உட்கார்ந்திருந்தாள் வசந்தி. அவளது உணர்வுகளும் பார்வையும் யாரோ ஒருவரை எதிர் பார்த்த வண்ணம் இருப்பதை காட்டியது. ஆம் அதே ஆலமர நிழலில் அன்று ஆதவன் சொன்ன வார்த்தைகள் அவள் காதுகளில் இன்னும் ஓயவில்லை ஆனால் எங்கே அந்த ஆதவன். அவளால் நினைத்துக் கூடப்பார்க்க முடியவில்லை. வசந்தியின் கண்கள் கண்ணீரால் நிரம்ப மீண்டும் அவள் நினைவுகள் துள்ளித் திரிந்த கடந்தகால வாழ்கையில்.

வசந்தி அவளின் குடும்பத்தில் ஒரே ஒரு மகள் அக்கிராமத்தின் மத்தியில் உள்ள பாடசாலை ஒன்றில் A/L படித்து வந்தாள். அவள் படிப்பில் மட்டுமன்றி அனைத்து கலைகளிலும் சிறந்து விளங்கினாள். அதே பாடசாலைக்கு அருகில் உள்ள புத்தகக் கடை ஒன்றில் வேலை செய்து வந்தான் ஆதவன். சிறுவயதில் தகப்பனை இழந்த ஆதவன் தனது தாய் சகோதரி, தம்பி என இவர்களைக் காக்கும் பொருட்டு அக்கடையில் வேலைபார்த்து வந்தான். புத்தகம் கொப்பி வேண்டுவதற்காக அக்கடைக்கு சென்றுவந்த வசந்தியின் அழகாலும் அவளின் மழலைப் பேச்சிலும் மயங்கினான் ஆதவன். கொப்பியுடன் சேர்த்து காதல் கடிதமும் பரிமாற்றப்பட்டன. நட்பு காதலாக மாறியது. ஆதவனின் நற்குணம் நேர்மையான பேச்சு என்பன வசந்தியின் ஆழ் மனதைத் தொட்டது. அவனையே தனது உயிராக நினைத்தாள். பாடசாலையில் கிடைக்கும் ஓய்வான நேரங்களில் ஆதவனின் கடையில் வசந்தியின் பொழுதுகள் எல்லாம் இனிமையாகக் கழிந்தன. அதனைவிட விடுமுறைக் காலங்களில் அவ்வூர் ஆலமரத்தடியிலும் இருவரும் சந்திப்பது வழக்கம்.

முதல்நாள் மாலை நேரம் அதே ஆலமர நிழலில் ஆதவனின் அருகில் வசந்தி அமர்ந்திருந்தாள். காதல் வார்த்தைகள் பல அவர்களின் பொன் மொழிகளாக உதிர்ந்தன. வசந்தி நான் ஒரு கவிதை சொல்லட்டுமா என ஆதவன் கேட்க ஆதவனை நிமிர்ந்து பார்த்த வசந்தி நீங்களுமா என வியப்புடன் பார்த்தாள். ஏன் என்னால் முடியாதா. உன்னைப் பார்க்கும் போதெல்லாம் கவிதையே சுரக்கின்றது..

"நிலவில்லையெனில் வானுக்கேது எழில்
நீயில்லையெனில் எனக்கேது வாழ்க்கை.
உன்னைப் பார்த்தவுடன் என்னையே
நான் மறக்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னருகில் நீயிருந்தால் – இவ்
உலகையே நான் மறக்கின்றேன்
நீ மட்டும் போதும் எனக்கு"

ஆதவன் சொன்ன கவிதை வசந்தியின் ஆத்மாவைத் தொட்டுச் செல்ல போதும் போதும் வளியாவேண்டாம் என ஆதவனின் கவிதையை இடை நிறுத்திய வசந்தி. ஆதவனைப் பார்த்து ஆதவா எனது வீட்டாரை நினைக்க பயமாக இருக்கு A/L படித்து முடிந்ததும் என்னைய வெளிநாட்டிற்கு அனுப்பிடுவாங்க போல இருக்கு ஆனா உன்னைப் பிரிந்து இருக்க என்னால முடியாது அப்பிடி என்றால் நான். வசந்தியின் வாயைப்பொத்திய ஆதவன் வசந்தியைப் பார்த்து வசந்தி உனக்கென்ன பயித்தியமா நான் உயிரோடு இருக்கும் வரை அது நடவாது. கனவுகள் கலையலாம் ஆனால் உன் நினைவுகள் என்றும் கலைபவையல்ல எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உனக்காக நானிருப்பன்.

யாரோ பின்னால் தட்டுவது தெரிந்து தன்னிலைக்கு திரும்பிய வசந்தியை பார்த்த நிஷா அவளின் கண்களில் இருந்து வந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு உன்னை எங்கெல்லாம் தேடுகிறது வா வீட்டிற்கு போகலாம். தனியாக இருந்து யோசிக்காத எல்லாம் நல்லபடி நடக்கும் நான் ஆதவன் வீட்டிற்கு போயிற்றுதான் வாறேன் ஆதவனின் அக்காவும் தம்பியும் தான் இருக்கிறார்கள் அம்மாவும் மாமாவும் ஆதவனை தேடப் போயிற்றினம் அவன் நேற்று கடையில் இருந்து வரும்போது தான் காணாமல் போயிருக்கான் ஆதவனின் வீட்டுக்காறர் எல்லா இடமும் தேடிக்கொண்டிருக்கினம் அவன் எப்படியும் வந்திடுவான் என ஆறுதல் வார்த்தை கூறிய நிஷாவின் தோளில் சாய்ந்து அழுதாள் வசந்தி. அவளின் கண்களில் இருந்து சிந்திய கண்ணீர் துளிகள் நிஷாவைக் கூட சோகத்தில் ஆழ்த்தியது. நிஷா நான் என்ன பாவம் செய்தனான் எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்குது உனக்குத் தெரியும் தானே நம்ம காதலைப் பற்றி. வசந்தியின் சோக வார்த்தைகள் நிஷாவின் நெஞ்சத்தையும் உருக்கியது. நிஷா பிளீஸ் நீ போ நான் இந்த மரத்தடியில் கொஞ்ச நேரம் இருந்து விட்டு வருகிறேன். சரி நேரம் 5 மணிஆச்சு கெதியாவா எனக்கூறி நிஷா செல்ல. மீண்டும் அந்த ஆலமர வேரில் அமர்ந்த வசந்தியின் கண்கள் ஆதவனின் வருகையை எண்ணி மீண்டும் அவ் வீதியினை நோக்கின. அவளின் கண்களின் தேடலிற்கு யாரால்தான் விடை கூறமுடியும்.

– யாவும் கற்பனை –

*சோ.ஸ்ரீபாலா*
*விடுகை வருடம்,*
*நாடகமும் அரங்கியலும் சிறப்பு,*
*கலைப்பீடம்.*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுரைகள் மட்டும் சொந்தமடி

நாடி நரம்பின் சத்தம்
கேட்டு விழித்தெழுந்தேன்
அது எனதல்ல
என்னவளின் இதயத்துடிப்பு
ஏனெனில் நான்
அன்றிலிருந்தே இறந்துவிட்டேன்!
இன்றும் என் உதிரம்
உறங்கிக் கொண்டே தான் இருக்கிறது-உன்
உதடு அசைந்து என் உயிர் போனதால
உள்ளங்கள் துடிக்க மறுக்கின்றன
உனது மூச்சுக் காற்று
என்மீது பட மறுப்பதால்-இருந்தும்
உன் காதில் இன்னும் விழவில்லை
என் இதயம் உன் பெயர் சொல்லித் துடிக்கிறதென
தொப்புள் கொடிக்குத் துணை நின்று-உன்
துணையை வெறுக்கத் துணிந்தாயே!
கடந்த காலம் இன்றும் என் உள்ளத்தில்
முள்மீது கிடக்கும் ரோஜாப் போல
உனைப் பார்த்த முதல் நாள் தான்-நான்
வாடாத பூவைப் பார்த்தேன்.
அது எனக்கென வந்த போது
என்னுயிரே உன்னிடமாச்சு-இருந்தும்
அது நப்பாசையான கதை உனக்குக் கூட தெரியாதா?
நீயே கூறு நான் பாவியானவனா?
இல்லை பலியானவனா?
முள்மீதிருந்த ரோஜாவுக்கு ஆசைப்பட்டேன்
அப்போது தான் தெரிந்தது
என்னுயிரே அந்த ரோஜா தான் என்று
முற்களின் நடுவே
எனக்காக மட்டும் மலர்ந்த
இந்தச் சிவப்பு ரோஜாப் பூவை
என் உதிரத்தை ஊற்றி
உதிராமல் காப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னில் உதிரம் இருக்கும் வரை
அதற்கு உதிர்வே இல்லை.
உயிர் கொண்ட அந்த
உதிர்வில்லா ரோஜா
பேச ஆரம்பித்த போது தான்—அதை
வளர்த்தவன் அடியோடு
அறுத்து விட்டானே—உன்னை
வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய....!
என் உயிரென நினைத்த உன்னை—உன்
உறவுகள் ஏற்றுமதிப் பொருளாக்கிவிட்டனர்
வானம் அழுதாவது உனக்கு நீர் வரட்டும்— என்
அன்பின் ஆழங்கண்டு.....!
பாறையைப் போல
உணர்வுகள் இல்லாமல்
இருந்து விடாதே
நீ ஒரு ரோஜா
என்பதை மறந்து விடாதே........
உன்னை வாழ வைக்க விரும்புகிறேன்.........!
வெளிநாட்டு விருப்பில்
ஒளி தேடும் விட்டிலாகி விடாதே!



ஆர்.மதி,
2ம் வருடம்,
கலைப்பீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலைத்தேடி.......

கதிரவன் தன் அன்றைய கடமைகளை முடித்துக் கொண்டு உறங்கச்செல்லும் மாலை நேரம். தேக்கி வைத்த குருதியையெல்லாம் மேற்கு வானில் தெளித்து விட்டது போன்ற வண்ணக் கோலம் காண்பவர் மனதையெல்லாம் கவரும் அந்த எழிலோவியம் அறிவழகன் மனதில் ஒரு சலசலப்பையும் ஏற்படுத்தவில்லை. ஒரு கவிஞனுக்கு இவையல்லவா உயிர் தரும் விடயங்கள். பலரும் இவனை ஒரு கவிஞனாகக் கருதிக் கொண்டாலும் இந்த நிலையில் அவனைப் பார்ப்பவர்கள் தம் கருத்துக்காக வருந்துவார்கள்.

அறிவழகனின் மனதில் பெரிதாய்த் தெரிவதும் அவனை இவ்வாறு தான் இருக்கும் சூழலையும் மறந்து சிந்திக்க வைத்ததும் ஆனந்தியின் சில கேள்விகள் தான். இருபத்து நான்கு வருடங்கள் கடந்து விட்ட தன் இளமைக் காலத்தின் வாழ்க்கையில் சிந்திக்க வைத்தது அவளது கேள்விகள் தான். இன்னும் தன் சிந்தனையில் இருந்து அறிவழகனால் விடுபட முடியவில்லை. ஆனந்தியின் கேள்விகள் அவனை சுயவிசாரணைக்குட்படுத்தின.

"அறிவழகன் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ படிப்பை இப்படி இடையில விட்டிட்டுப் போறன் என்று நிக்கிறியளே உங்கட எதிர்காலம் எப்படி போகும் என்று யோசிச்சனியளே. குடும்பச் சுமையக் காரணமாச் சொல்லுறியல் ஆனால் எவ்வளவு கஸ்ரம் தான் வந்தாலும் யாரிடம் நீங்க உதவியைப் பெற்றாலும் கூட உங்கட எதிர்காலத்த தீர்மானிக்கிற எந்த ஒரு முடிவையும் நீங்க தான் சுயமாச் சிந்திச்சு எடுக்க வேணும். எங்களப் போல பல்கலைக்கழகத்தில படிக்கிறவயளே இப்படித் தடுமாறி யாரோ ஒருவர் போடுற கோட்டில நடக்கத் துணிந்தால் கல்வி கற்காத சமூகத்தின்ர நிலைமை எப்படி இருக்கும்? ஒண்டு தெரியுமா அறிவழகன் உங்களுக்கு, படிக்காத அவையள் கூட சொந்தமாகத்தான் முடிவெடுத்து தங்கட சொந்தக் காலில நிக்கினம். உங்களிற்ர என்ர காதலச் சொன்னபோது நான் இருக்கிற குடும்ப சூழல்ல ஓம் எண்டு முடிவு சொல்ல ஏலாது என்று முடிவு சொன்னீங்க. அது கூட எனக்குப் பெரிசாத் தெரியல்ல, உங்கட எதிர்காலத்தைப் பற்றிச் சுயமாக முடிவெடுக்கத் தயங்குறீங்களே அதைத்தான் என்னால தாங்க முடியல. நீங்க என்னைக்காதலிக்காதது பெரிசாத் தெரியல ஆனால் உங்கட எதிர்காலத்தப் பற்றி யோசிச்சால் தான் கவலையா இருக்கு" என்ற ஆனந்தியின் கேள்விகளும் கருத்துக்களும் அறிவழகனை தன் வாழ்க்கை பற்றிச் சிந்திக்கத் தூண்டின.

திருகோணமலையின் விவசாயக் கிராமமொன்றில் கூடிய வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்த குடும்பம். யுத்த நெருக்கடிகளால் இடம் பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாகக் குடியேறி 95களில் தான்மீண்டும் இலங்கை வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பரமான வாழ்க்கைக்குப் பழக்கப் பட்டிருந்தாலும் கூட எல்லோரையும் போல கிடைத்த வாழ்க்கையை அனுபவித்து வாழத் தொடங்கினர். சிறு வயதிலிருந்தே கல்வியில் ஆர்வமுடன் கற்று வந்த அறிவழகன் கிராமப் புறப் பாடசாலையொன்றிலேயே பிரத்தியேக கல்வி ஏதுமில்லாமல் படித்து க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்தான். வெளிநாட்டில் தொழில் புரியும் உறவினர் ஒருவரின் உதவியுடன் நகர்ப்புற பாடசாலையில் கல்விகற்கும் வாய்ப்புக் கிடைத்தாலும் உங்கள் உதவியை நான் பல்கலைக்கழகம் சென்றதும் செய்யுங்கள் என்று விட்டு கிராமப்புற பாடசாலையிலேயே படித்து உயர் தரத்திலும் சிறந்த பெறுபேறுகளுடன் பல்கலைக்கழக அனுமதி பெற்று உறவினரின் உதவியுடன் பல்கலைக்கழக கல்வியைத் தொடர்ந்தான்.

பல்கலைக்கழகக் கல்வியும் எவ்வித சிக்கலும் இல்லாமல் அவன் விரும்பிய பாடத்திலேயே அவனுக்குச் சிறப்புக் கற்கைக்கான அனுமதியும் கிடைக்க தன் எழுத்தாற்றல்களை சுயமாக வெளிப்படுத்தத் தொடங்கினான். நான்கு வருடங்களுக்குள் முடிய வேண்டிய கல்வி அசாதாரண சூழ்நிலைகள் பலதாலும் ஒன்றரை வருடங்கள் மேலதிகமாக கூடியது. இந்த நிலையில் குடும்ப சூழ்நிலையில் எவ்வளவோ மாற்றங்கள்.

குடும்பப் பொறுப்புக்கள் எதையுமே ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் அறிவழகன் இல்லை. அவ்வாறான தொரு நிலைமையை அவன் எதிர் பார்த்திருக்கவும் இல்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு நாட்களையும் ஒரு கலைநயத்துடன் அனுபவித்து அவற்றைக் கவிதையாக்குவதில் அவன் பொழுதுகள் கழிந்தன. வந்து போன காதல்கள் அவனுக்கு ஒரு விளையாட்டாய் தெரியவே அவனுடைய படிப்புத் தொடர்ந்தது. அவனது மூன்றாவது வருடத்தில் தான் ஆனந்தியின் நட்புக் கிடைத்தது. பார்ப்பதற்கு அழகானவள் ஆனந்தி. இருவரதும் நட்பும் ஒரு கட்டத்தில் காதலாக மலர வேண்டிய நிலையில் அறிவழகனுக்கு அப்போது தான் பிரச்சினை ஆரம்பமாகியது. அறிவழகனுக்கு உதவி செய்து வந்த உறவினரின் விருப்பம் அறிவழகனையும் தன்னுடன் எடுத்து அவனையும் தன்னைப் போல முன்னேற்றிப் பார்க்க வேண்டும் என்பது. அதனால் நாட்டின் நிலை இப்படி இருக்கும் போது நீ அங்கே இருக்க வேண்டாம். முதலில் பாஸ்போட்டை முடித்துவிட்டு நான் சொல்லும் ஏஜென்ஸியைப் போய்ப் பார். அவர் சொல்வது போலச் செய் என்றார். இந்த நிலையில் ஆனந்தி தன் காதலை சாடைமாடையாகச் சொல்லிவிட அறிவழகனுக்கு என்ன செய்வது என்பதில் தடுமாற்றம். தனக்காக இவ்வளவு உதவி செய்பவர் நாளைக்கு "நீ இந்தப் பெண்ணைத்தான் திருமணம் செய்ய வேண்டும் என் நம்பிக்கையைக் கெடுத்திடாதே" என ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் அவனால் என்ன சொல்ல முடியும்? தன் குடும்ப சூழலை காரணம் காட்டி யாரோ ஒரு பெண்ணின் புகைப்படத்தைக் காட்டி இவளைத்தான் திருமணம் செய்யப் போவதாக கூறிவிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மனதுக்குள் உள்ளதை சொல்ல முடியவில்லை. சில காலத்தின் பின் தன் தவறை உணர்ந்து தன் காதலை தெரிவிக்க ஆனந்தியிடம் சென்றவன் அவள் வேறு ஒருவரைக் காதலிப்பதை அறிந்து நட்போடு நிறுத்திக் கொண்டான்.

இப்படியாகக் காலம் கழிய அறிவழகனின் விரிவுரைக்கு வருகை தரும் நேரம் குறைவடைவதை அவதானித்த ஆனந்தி அவனைச் சந்தித்துக் காரணம் கேட்டாள். அப்போது தான் நடந்து முடிந்தவை நடக்கப் போபவை எல்லாவற்றையும் அறிவழகன் ஆனந்திக்குக் கூறினான். இதைக் கேட்ட ஆனந்தி அறிவழகனின் நிலையை உணர்ந்து கொண்டு அந்த விடயங்களைக் கூறலானாள்.

அறிவழகனைப் பொறுத்த வரையில் இந்த நாட்டு நிலையில் இது ஒரு பாதுகாப்பாக இருந்தாலும் கூட அவனது கனவுகள், லட்சியங்கள், விருப்புக்கள் எல்லாமே புதைக்கப் பட்டிருக்கின்றன இந்த முடிவில் என்றுதான் கூறமுடியும். இது அவன் செய்யும் ஒரு வகைத் தியாகமாகத்தான் இருக்க முடியும். இந்த முடிவால் நாளை அவன் புகழோடும் வாழ முடியும், வாழ்க்கைப் பயணத்தில் புதைந்தும் போகக் கூடும். என்ன தான் செய்வது நாம் அனைவருமே எவனோ ஒருவன் வரைந்த கோட்டில் தானே பயணப்படுகிறோம். பிறருக்காக பிறரோடு சேர்ந்து வாழ்வது தானே வாழ்க்கையாகிறது. ஒருவன் தனித்து நின்று இந்த உலகில் எதை சாதித்து விட முடியும்? எதிர்காலம் பற்றிய உறுதியின்றி இன்று எத்தனை பேர் எம்மில் வாழுகின்றோம். அறிவழகனின் முடிவு நிச்சயமாக அவனுக்கு திருப்தியில்லாவிட்டாலும் கூட நாளை அவனது நிழலில் ஒதுங்க அவன் சந்ததியில் இன்னுமொரு அறிவழகன் வராமலா போய் விடுவான்? இவன் இப்படியான ஒரு முடிவை அவனுக்குக் காட்டமாட்டான் என்பது மட்டும் உறுதி.

*அட்ஷயன்*
*இறுதி வருடம்*
*கலைப்பீடம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்காக சிலவரிகள்...............

உள்ளுக்குள் உன்னை வைத்து
உதட்டில் மறைக்கப் பார்க்கிறேன்
உன்னால் தினம் என்னை இழக்கிறேன்
உறவுகள் உன்னை வெறுக்க
உந்தன் நினைவுகள் என்னை வதைக்கிறது.
உனக்காகப் பிறந்தவள் நான்
உனக்காகவே உயிர் வாழ்கிறேன்
உன் பிரிவாலே வாடுகிறேன்
உன் முகவரி தெரிந்தும் கூட
உனக்குத் தூது விட முடியவில்லை.
உன்னவளாய் கூண்டுக்குள் வாழ்கிறேன்!
உண்மைக் காதல் நாடுவிட்டு நாடு சென்றாலும்
உள்ளத்திலே தொடரும்
உயிருள்ள காதல் ஊமையனையும்
உரத்துப் பேசவைக்கும்.
உன்னோடு கலந்த என் காதல்
உண்மையானது.
உயிர் மூச்சுடன் பிறந்தது-நீ
ஊமையனுமல்ல.
உண்மைக் காதலை
உயிர்த் துடிப்புடன்
உரைப்பாயா என் அன்பே.......!!



ஜி. இந்துமதி,
1ம் வருடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன்......

வெள்ளித் தேர் போல பெண்ணொருத்தி
செவ்விதழில் தங்க மாலை கௌவிய வண்ணம்
கண்ணிரண்டும் மின்னொளியோடு பகை தொடுக்க
குயில் மொழி இசைத்து
மெல்லிடை விசை கொடுக்க
பொற் கொடியாய் சாலை ஓரம் நீ வந்தாய்

யார்க்கும் வணங்கா முடியிவன்
மனமோ தடம் புரள
வணக்குருவி போல வந்து மறைந்தாய்
மீண்டும் கோடைக் குளிர் போல
கல்விக் கூடத்தில் நாம் இணைந்தோம்
இந்த உரமிழந்த மண்ணில் பூந்தோட்டமாய்
நண்பியென நீ வந்தாய்

நம் உறவு கண்ட ஆந்தை கண்ணோர்
சொற்போர் தொடுக்க
தமிழ் பெண்ணாய் தலை குனிந்தாய்.....
ஆதலால்
உன் மீது எனக்கு முடிவிலாக் காதல்
உன் மானம் கலைக்க
நான் உன் எதிரி அல்ல
உன் கற்பின் காதலன்

S.சித்தார்த்தன்
2ம் வருடம்
கலைகலாசார பீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள் நாம்......................

பட்டம் பெறுவதற்காக– நாற்திசையிலிருந்து
பறந்துவந்த பட்டாம்பூச்சிகள் நாம்
நட்பு எனும் பெயரில் வளாகத்தை
சுற்றி வந்த நண்பர்கள் நாம்

வளாகத்தில் நாம் செய்த லீலைகள்
ஒன்றல்ல ஓராயிரம்
நாம் கற்றதை விட– அரட்டை
அடித்த காலங்கள் மிக அதிகம்.

எதிர்கால விடியலை தேடி– இன்று
பிரிவின் விளிம்பில் பரிதவித்து நிற்கின்றோம்
நண்பர்களே!
சூரியன் எழுவது கிழக்கில் என்பது போல
வாழ்க்கை இனிப்பது நமது நட்பில்.

S.k. சிந்துரா
3ம் வருடம்
கலைப்பீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னால் உண்டான உணர்வுகள்....(காதல் காவியம்)

எப்படி உன்னால் முடிந்தது
என்னை ரசிக்கும் அந்தக்
களவுப் பார்வையை
பூக்களுக்குக் கற்றுக் கொடுக்க!
கண்கள் சுழலும் திசையெல்லாம்
நீ பூத்திருக்கிறாய்
பூக்களின் வடிவில்!
என்னை மறந்து
உன் புன்னகைக்குள்
என்னைத் தொலைத்து விடுகிறேன்!
சுவாசமெல்லாம் உன்
உடலின் நறுமணம் தான்.
கடைக்கண் பார்வைகளால்
என்னைக் காயப்படுத்தியது
போதாதா?
ஏன் இன்னும்
என்னை இம்சிக்கிறாய்?
உனக்கு அந்தத் தொப்பி கூட
கிரீடமாய் தான் தெரிகிறது
அது தான்
அந்தக் கிரீடத்தை
வாங்கிக் கொண்டேன்
என் பாதுகாப்பில் இருக்கட்டுமென!!
நான் சந்தித்த பெண்களில் எல்லாம்
இல்லாத ஏதோ ஒன்று
உன்னிடம் இருப்பதாய்
தெரிகிறது-அது தானடி
தொலைவில் இருந்தாலும் நீ
தொந்தரவு செய்கிறாய்!

சாப்பிடக் கூட பிடிக்கவில்லை,
ஓரிரு நாட்களாவது
உன்னோடு இருந்து
உணவருந்திய அந்த
நினைவுத் துளிகள் நிதம்
என் நெஞ்சில் கனப்பதால்!
வேண்டுமா? வேண்டுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பரிமாறுவாயே
அதை நினைக்கையில் இந்த
உணவெல்லாம் உப்பில்லாமல்
போகுதடி!
படிக்க நினைக்கிறேன் முடியவில்லை
உன்னோடு சேர்ந்து படித்த
சில நிமிடங்கள் கூட
என்னைச் சிலுவையில் இன்னும்
அறைகின்றன.
பாடப் புத்தகம் முழுவதும்
உன் பெயர் எழுதியே
என்னை மறந்து விடுகிறேன்!

நித்திரை.
அது மட்டும் எப்படி
வந்து விடும் சொல்?
சோரும் உன் கண்களுக்குள்
என் கண்கள் செலுத்தி
உன் உறக்கத்தை பாதி
பறித்துக் கொண்ட பின் தானே
நான் தூங்கப் போவேன்
இப்பொழுது எப்படி நீயில்லாமல்
தூங்கிவிட முடியும்?

ஊர் சுற்றல் எப்படி
நீ கை காட்டி விடையளித்து
அனுப்பாமல் என்னால்
உன்னை மறந்து சுற்ற முடியும்?
நண்பர்களுடன் வெளியில்
நடக்கக் கூட மனமில்லை
அந்த வல்லைவெளி
ஞாபகப்படுத்தும் உன்னை இந்த
நான்கு சுவர் அறையில் தேடி
அலைந்து தவிக்கிறேன்.
அசையும் பிணமாய் உயிரோடு தவிக்கிறேன்!

விளையாட்டு.
முடியவில்லை உன்னை மறந்து
லயித்துவிட....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதானத்தில் நிற்க முடிகிறது
உன்னை மனதில் வைத்துக் கொண்டு,
பந்துகள் கண்முன் வந்தாலும்
அந்தக் கள்ளமற்ற உன்
புன்னகை தான் தெரிகிறது!
உன்னோடு சேர்ந்து
விளையாடிய -அந்த
மாலை நேரங்கள் இன்னும்
வண்ணப் புகைப்படமாய் மனதில்!

என் நடப்பியலில் பெரிய மாற்றமென
நண்பர்கள் சொல்கிறார்கள்
உனக்குத் தானே தெரியும்
அந்த இயலுக்குச் சொந்தக்காரியே
நீ தான் என
இந்தக் காதலிஸத்தின்
உரிமைக்காரி நீ தானே!
எவ்வளவு தூரம் உன்னை விட்டு
விலகி இருந்தாலும்
அது நான்
கண் மூடும் காததூரம் தான்!
ஏனென்றால்,
கண் மூடினால்
நீதானே தெரிகின்றாய்?

என் குருதியில் செங்குருதித்
துணிக்கைகளை விட
உன் முகத்தின் விம்பம் தான்
கூடுதலாய் இருக்கும்!
சில நேரங்களில்,
சாப்பிட படிக்க தூங்க
முடியவில்லை ஆனால்
உன்னைமட்டும் நினைக்க
முடிகிறது!

எனக்காகப் பிறந்தவளா நீ
என்னில் எழும் எரிமலைகள் கூட
தணிந்து போகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நினைத்தவுடன்!
இந்த துன்ப அவஸ்தைகள்
இன்பமாய்த்தான் இருக்கிறது
ஆனால் இவையே
என் உயிரும் குடிக்கின்றன!

என்னில் உனக்கு
எவ்வளவு கரிசனை
என் உயிர் பிரிந்தால்
நான் மட்டும் வாழ்வேனா
என்றாயே ஏனடி
உன் காதலை மட்டும்
என்னிடம் மறைத்துக் கொண்டாய்?
இதுவரை காதலை விளையாட்டாய் தான்
நினைத்தேன்-ஆனால்
இப்பொழுதெல்லாம் உன்னை
காதலியாய் நினைக்கக் கூட
முடியவில்லையடி-நீ
என் மனைவியென்றல்லவா
உள்ளம் சொல்கிறது!

என் கேள்விகளையெல்லாம் உன்
மௌனத்திற்குள் புதைத்துக்
கொண்டாயே
எப்போதடி உன்
மௌனம் கலைக்கப் போகிறாய்?

பாதையோரம் விழிகளால் தினமும்
தேடுதல் நடத்துகின்றேன்
நீ வருவாய் என்ற
நம்பிக்கைகளோடு
ஏமாற்றங்களே பழகிப் போனது
என்றாவது என் வாழ்வில்
வசந்தம் வீசுமல்லவா?

என்னைப்போல நீயும்
மனதில் காதலோடு
சொல்ல முடியாத வேதனையோடு
தவித்துக் கொண்டிருக்கிறாயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது மௌனம் கலைப்போம்?
இருவரும் வாழ்வில் ஒரு
பாதையில் சந்திப்போம் என
காத்திருக்கிறேன்-அப்போது
நீ நீயாக நான் நானாக
இருந்தால் உன்னோடு
பயணிப்பேன் அதுவரை
உனக்காய் காத்திருப்பதே - என்
இறுதி லட்சியம்"

காதலின் அவஸ்தைகள்
இதுதானா?
கண்ணுறங்க முடியாமல்
உணவருந்த முடியாமல்
குதூகலிக்க முடியாமல்
சிரிக்க முடியாமல்
இன்னும் இன்னும்
ஓராயிரம் இன்ப அவஸ்தைகள்!

வாழ்க்கையில் எதுவரை நீ
தனிமையிலேயே இருந்துவிட முடியும்?
எப்போதாவது ஒரு துணை
தேவைப்பட்டால்
உனக்காய் காத்திருக்கும்
இந்த ஜீவனை மறந்து விடாதே!

காற்றின் சுகந்தத்தை விரும்பி
சுவாசிக்கிறேன்-ஏனெனில்
உன் மூச்சுக் காற்று
கலந்திருக்கும் என்பதால் தான்!

உனக்காய் ரோஜாவைப்
பறிக்க விரும்பினேன்-நீதானே
அதில் முட்கள் இருப்பதையும்
எனக்கு ஞாபகப்படுத்தினாய்
எம் காதலில் இருக்கும்
முட்களை மட்டும் ஏனடி
சொல்ல மறந்தாய்?


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உன்னோடு கண்மூடி
கதை பேசுகிறேன்
வார்த்தைகள் அறுந்து அறுந்து
மௌனங்கள் தான்
முடிவாகின்றன !
அந்த ஓரிரு வார்த்தைகள் தான்
உன்னோடு நான்
பேசிக்கொண்டிருக்கும்
இவை!

படிப்பு பட்டம் பதவி
இவையெல்லாம் பெரிதாய்
தெரியவில்லை உன்னைவிட !
ஏன்? எப்படி உன்னால்
என்னை இப்படி மாற்ற முடிந்தது?
என் எழுத்துக்களுக்கு
பறக்கும் சக்தியிருந்தால்
உன் கண்களில் தினமும்
ஆயிரம் கனவுகள் சேர்க்குமே!

உனக்கும் எனக்கும் இடையே
இடப்பட்ட அந்த வேலி
உறவுகளா இட்டன இல்லையே
நீ தானே இட்டுக் கொண்டாய்!
தினமும் பிரார்த்திக்கிறேன்
கடவுளாவது எம்மைச்
சேர்த்து வைக்கமாட்டானா
என்ற வாஞ்சையோடு !
உனக்கு மட்டும் எப்படி
இல்லாமல் போனது
இந்த உணர்வுகள்,
இந்தக் கனவுகள்!!

பல்கலைக்கழகம் என்னும்
வேடந்தாங்கலில் நான்
ஜோடியில்லாத ஒற்றைப் புறாவாய.
உன் ஊரின் பெயரை
கேட்டதுமே துடித்துப் போகிறேன்

உனக்கு ஏதும் நடந்துவிட்டதா என!
தினமும் காலையில் கண்விழிக்கிறேன்
இரவில் கண்மூடுகிறேன்
உன் நினைவோடு
இந்த இம்சைகள்
நானே ஏற்படுத்திக் கொண்டவையா?

என் பூமியில் எப்போதும்
கோடைதானா?
ஒரு வசந்த காலம் வாராதா?

உன்னைக் கண்டதும் நினைத்தேன்
வசந்த காலம் வந்து விட்டதாய்
ஆனால்,
அன்று முதல் இலையுதிர் காலம்
தொடங்கிவிட்டதடி!
தவிக்கிறேன் தடுமாறுகிறேன்
உன் ஒரு புன்னகையில்
என் பூமியில் வசந்த காலம் வருமென!

காதலிக்க தகுதி வேண்டும்
என நினைக்கிறாயா?
பணம் வேண்டுமென
நினைக்கிறாயா?–இல்லை
இன்னும் இன்னும் ஏதாவது?
அப்படியெனில் எப்படி ஒரு
தடவையாவது என்னை
உன் மனதில்
நினைக்க முடிந்தது?
நானும் ஊசி நுனி காய்ச்சி
என் கரத்தில் உன் பெயர் பொறிக்க
நினைக்கிறேன்–மனம் தடுக்கிறது
அது அநாகரிகம் என!
ஆனால்,
என்னை வருத்தியாவது
என் காதலை
உனக்கு காட்டிவிட வேண்டுமென
நினைக்கிறேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பானவளே,
வானமும் தேசமும் இன்று
தெளிவாக இல்லை
உன் மீதான பிடிப்புத்தான்
என்னை இன்றும் வாழச் செய்கிறது
அதுவும் இல்லாது போனால்
என் துடங்களை நீ நாளை
தேடித்தான் பார்க்க வேண்டும்!

குறும்புகளோடும் குதூகலிப்போடும்
கேலிப் பேச்சுக்கள் பேசி
வண்ணப் பறவைகளை வட்டமிட்டு
கைகளில் வெண்சுருட்டும்
கண்ணுக்குள் மதுவோடும்
கலகலக்க முடியவில்லையே-நீ
எப்படி இந்த நாகாஸ்திரத்தை
என் மீது பிரயோகித்தாய்?
உன்னோடு பழகிய அந்த
ஓரிரு நாட்கள்
வாழ்க்கையை வாழ்ந்து முடித்துவிட்ட
பிரம்மிப்பாய் என்னில்,
எதைச் செய்வது
எப்படி இன்னும் என்
உயிரை உடலோடு கட்டிப் போடுவது?

என் மரணத்தின்
கடைசி ஊர்வலம் தான்
உன் கல் மனதைக்
கரைக்குமென்றால்,
என் உயிர் பிரிக்கவும்
உனக்காகக் காத்திருக்கிறேன்
காதல்
இல்லாவிட்டால்
சாவதுதான் முடிவா என
நீ கேட்கலாம்-ஆனால்
நான் தினமும் அனுபவிக்கும் இந்தப்
பிரசவ வலியை விட
அந்த மரணம் எனக்குப்
பெரிதில்லை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று மட்டும் மனதில்
வைத்துக்கொள்.
என் உயிர் பிரிந்தால்
கண்ணீரால் கூட உன்னைக்
காட்டிக் கொடுத்து விடாதே
என் உறவுகளுக்கு!
பாவம் அவர்கள்
வேதனையில் உன்னைச்
சோதித்து விடுவார்கள் –என்
சாதனையை மறந்தபடி!

அன்பின் விம்பமே,
போதாதா இத்தனை காலம்
உன் மௌனச் சிறையில்
என்னைக் கட்டிப் போட்டது!
உன்னைக் காணாமலே
இருந்திருக்கலாம் போல தெரிகிறது
ஏனெனில்,
அப்போதெல்லாம் சிரித்துச் சிரித்துப்
பேசிய உன் உறவுகள்
இன்று அந்நிய கிரகத்தில்
இருந்து வந்தவனைப் போல
பார்க்கின்றன!
ஏனடி காதல் குற்றமா
இல்லை, உன்னைக் காதலித்தது
குற்றமா?
தலையில் ஒருத்தியை,
தன்னுடலின் பாதியில் ஒருத்தியை
வைத்திருக்கும் சிவனை
வணங்கலாம்?
இடமும் வலமும் ஒவ்வொருத்தியை
வைத்திருக்கும் முருகனை
வணங்கலாம்?
தீக்குளிக்கச் சொன்ன இராமனை,
ராதையோடும் கோபிகைகளோடும்
கும்மாளமிடும் கிருஷ்ணனை
வணங்கலாம்?
ஆனால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிடம் காதலைச் சொன்ன
என்னை மட்டும் கண்ணிலும்
காட்டக் கூடாதா?
பார்த்தாயா எவ்வளவு
சுயநலம் மிக்க உலகம்?
வேண்டுமடி இது எனக்கு
உன்னையே என் உலகமாய்
நினைத்துக் கிடக்கிறேனே
அதற்காக
உன் உறவுகளே என்
உறவுகளென
அக்கா, அண்ணா, தம்பி, தங்கை
அம்மா, அப்பா என
உறவு கொண்டாடினேனே
அது தவறா?
என்னதான் சமாதானம்
சொன்னாலும்
என் எண்ணத்திலிருந்து உன்னை
விலக்கிவிட முடியவில்லை!
இன்னும் எத்தனை ஆண்டுகள்
ஆனாலும்
உன் உறவுதான் என் வாழ்வில்
ஒளியேற்றும் !!

காதலித்தால் கவிதை மட்டுமல்ல
கண்ணீரும் வரும் என்பதை
இப்போது தான் புரிந்து கொண்டேன்!
அதிகாலையில் உன் முகத்தில்
விழித்த அந்த ஓரிரு
நாட்கள் போதும்
இன்றெல்லாம் உன்முகம் தான்
இமைகளுக்குள் சிறைப்பட்டுக்கிடக்கிறது!
சிரித்து சிரித்துக் கதை பேசும்
சித்திரமே ஏன் என்னை
புரிந்து கொள்ள மறுக்கிறாய்?
குழைந்து குழைந்து
அன்பு காட்டினாய்
கூடிக் கூடிக் குலாவினாய்
இனிக்க இனிக்க பழகினாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசினாய் வம்பு வளர்த்தாய
இப்போது மட்டும் ஏன்
திரும்பியே பார்க்கிறாயில்லை?
நீ இல்லாத ஒரு வாழ்க்கையை
நினைப்பதற்கே முடியாதிருக்கையில்
எப்படியடி நீயில்லாமல்
வாழ்ந்துவிடப் போகிறேன்?

தினமும் மௌனங்களால்
உன்னோடு பேசி
கற்பனைகளில் உன்னோடு
வாழ்ந்து .
பார்வையால் மட்டும்
கதைபேசி
நீ செல்லும் பாதையில்
தூ
ர
லா
ய் வீசி
உன் சிந்திய வார்த்தைகளை
கவிதையாய்க் கோர்த்து
நிசப்த அலைவரிசைகளில்
உன்னோடு பாடி
மீண்டும் மீண்டும் மௌனமாய்
எனக்குள் மரணித்துக்
கொண்டிருக்கிறேன்!
இதுவே தொடருமெனில்
நாளை நானும் கல்லறையாவேன்.

ஒரு தடவை என் கண்கள்
கசிந்த போது ஆறுதல் சொன்னாய்
இன்று என் தலையணை
நனைக்கிறேன்!
தெரியாமல் இருக்கிறாயா-தெரிந்தும்
தெரியாதது போல
காட்டிக் கொள்கிறாயா?
எத்தனையோ தடவைகள்
உன்னை மறந்துவிட முயன்று
என்னை மறந்து போகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகளால் என்னை வாட்டி
கண்ணீரால் குளிப்பாட்டி
எப்போது என்னைக்
கல்லறையாக்கப் போகிறாய்?

மறந்துவிடு என்று சொல்லாதே
இறந்துவிடு என்று சொல்
சிறகு விரிக்கிறேன் இந்தச்
சிறைவாச உலகில் இருந்து!
உன் நினைவுகள் அரும்பும் போது
நிதமும் கவிதை பொறிக்கிறேன்
என்றாவது ஒரு நாள்–நீ
வாசிக்க மாட்டாயா என்ற
நம்பிக்கையில
ச
று
க்
கி
ய
என் வாழ்க்கையை எப்போது
நீ வந்து
நி
மி
ர்
த்
த
ப்
போகிறாய்?
உன்னிடம் நான்
சொல்ல நினைத்தவை ஏராளம்
ஆனால்,
சொல்லிக் கொண்டிருப்பவை
ஒரு சில தான
நீ...ண்.....ட....... இந்த
கனவுகளை நீ நிதர்சனமாக்குவாய்
என்ற ஆசையில் தவிக்கிறேன்!!

ச.கோபிரமணன்
இறுதி வருடம்.
கலைப்பீடம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிதறல்கள்...............

உந்தன் மலர்விழிகளால்
என் விழிகள் தொட்டு
மௌனமாய்
அரங்கேற்றிக் கொள்கிறாய்
நம் காதலை!

குழந்தையின்
கைப்பிடித்துச் செல்லும்
தந்தையைக் காண்கையில்
வலிக்கத்தான் செய்கிறது
தந்தையின் பிரிவு!



பருகிய பின் தான்
உணர்ந்து கொண்டேன்
அமுத விஷமென்று
காதல்!

கையில் சிராய்த்துக் கொண்ட
அழுகையில்
உன் மடி தேடும்
மழலையாய்
நான் !!!

*ப.அனிதா*
*விடுகை வருடம்*
*கலைப்பீடம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமைப் பெண்ணாக.........

மகளிருக்கு ஒரு நாளாம்
மார்ச் எட்டு தினம் அன்று
பெண்ணினமே உனக்காக
உள்ளதும்மா ஓர் நாள்தான்
உயிர்களின் படைப்பிற்கு
மூதன்மையாய் நீயிருக்க
உலகம் உன்னை உதாசீனப்படுத்துவதேன்
ஆணுக்கு சரி நிகர் பெண்ணென
அறைகூவி மலர் அழைக்க
அடுப்படி வாழ்க்கை மட்டும் மீளவில்லையே

பெண்ணுக்குள் ஞானமதனை வைத்தான்
புவி பேணி வளர்க்கின்ற ஈசன்
என்ற பாரதியின் ஞானங்கள்
இன்று மௌனத்தால்
மறைக்கப்படும் மர்மமென்ன?
சீதனக்கொடுமைகளாலும்
மறுபக்கம் மாமியார் கொடுமைகளாலும்
தன் கையே கண்ணைக் குத்துவதா?
தாய்க்குலமே சிந்தித்திடு
தயவு செய்து திருத்திவிடு
உன்னாலே கிடைத்ததிங்கு
பெண்ணுக்கு முழுவுரிமை
வார்த்தையில் கேட்டுவிட்டால்
வந்திடாது உனக்குரிமை
புறப்படு நீயும் புதுமைப் பெண்ணாக
புதுவுலகு உனை நோக்கி
இருகரம் நீட்டி வரவேற்கிறது.

ஆ.ஸ்ரெலா சுபோதினி
1ம் வருடம்
கலைபீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினி பஸ் பயணமும் இங்கிலிஸ் பாடமும்.........

மினி பஸ்சில் குனிந்தால் முகத்தில் – இடிப்பு
நிமிர்ந்தால் பின்னால் இடிப்பு
நின்ற கொண்டு கழுத்தை மடிப்பு
இதனால் நாரிப் பிடிப்பு.
சில்லறைக்கு மதிப்பு..... பயணிகளை மிதிப்பு
இதனால் பயணிப்போர் கொதிப்பு.....!
கொண்டக்ரர் சீற்றம்
முன்னால் இருந்தவளின் கொண்டை நாற்றம்.
மினிபஸ் கலைபட்டு மரண ஓட்டம்
பயணிகள் களைக்கப்பட்டு வயிற்றோட்டம்.
சத்தம் போட்டு அடிப்பார் ரைவர் சடின் பிறேக.....
முத்தம் கொடுக்கப்பட்டு அறைவாள் மங்கை.
இதனால் மினிபஸ்ஸில் எத்தனையோ யுத்தம்
வரம் வேண்டி சில பேர் foot boad இல்
ஒற்றைக்கால் தவங்கள்
பிற் பொக்கற் அடிக்கும் சவங்கள்
இத்தனைக்கும் மத்தியிலே இங்கிலிஸ் படிப்பதிலே
எனக்கோர் பேராசை.
இங்கிலிஸ் ஒரு அந்நிய பாஷை
இங்கு அதைப் படிப்பதிலே எனக்கோர் ஆசை!
பக்கத்து ரியூசனில் spoken ஓசை
பரவாயில்லை கொடுத்துப் பார்ப்போம்
கொஞ்ச காசை.
முதல் வகுப்பில் முகத்தில் ஒரு பயம்.
மூடி மறைப்பதில் எனக்கென்ன நயம்?
சக நண்பன் வாயில் சங்கீத லயம்
சத்தியமாய் அவர் அழியப்போவது நிஜம்.
வாத்தியார் வந்து நின்றார் என் பக்கத்தில்
What are you doing என்றார் தொடக்கத்தில்
கொட்டாவி விட்டேன் நான் மயக்கத்தில......
ஆங்கிலப் பாடம் பாதியிலே நின்றது
அருமந்த காசை ரியூசன் தின்றது.....
அட எங்களை யாரவர் வென்றது.....?
I'm sorry எங்களை English கொன்றது....!

*டே.ஏபல் டிலக்ஷன்,*
*இரண்டாம் வருடம்,*
*கலைப்பீடம்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காதலின் வலி அறிவாயா..........?

மௌனமாய் இருந்து என்னை பேச வைத்தாய்
என்னையே நான் மறந்திருக்க உன்னை நீ நினைக்க வைத்தாய்
உன்னையே நான் நினைத்திருக்க இன்று என்னை ஏன் மறந்துவிட்டாய்

மலர்களை நேசித்தபோது உதிர்ந்துவிட்டது
நிலவை நேசித்த போது தேய்ந்து விட்டது
உன்னை உயிராய் நேசித்த போது
நீ பிரிந்து சென்று விட்டாய்
பிரிந்து விட்டாய் ஓர் நாள் புரிந்து கொள்வாய்

கண்கள் கலந்து கொள்ள
இதயங்கள் இணைந்து கொள்ள
ஐயமின்றி உறவு கொண்டு
கனவுலகில் சஞ்சரித்து
யுகங்கள் தோறும் உனக்காய்
நான் எழுதும் கவியிலே
உயிரெழுத்தே நீயென நினைத்திருந்தேனே– அன்பே
உன் நினைவில் நானிருக்க
என்னையே நீ வெறுத்துவிட்டாய்!

காற்றின் ஒலியில் உன்
பெயரையே கேட்டேனடி
காணும் இடமெங்கும் உன்
விம்பமே கண்டேனடி
ஆற்றின் சலசலப்பில் கூட
உன் சிரிப்பொலியே உணர்ந்தேனடி
எப்போது நீ என்னை வெறுத்தாயோ
அப்போதும் உன்னையே நினைத்தேனடி.

மங்கிவிட்ட என் காதலில் ஒன்று மட்டும்
புரிந்து கொண்டேன்
முட்கள் நிறைந்த காதல் பயணத்தில்
காயப்படுவது கால்கள் மட்டுமல்ல ....
இதயங்களும் கூடத்தான்?
சுதந்திர கிளியாக சிறகடித்த என்னை
காதல் வலையில் சிக்க வைத்து
இன்பம் கண்டாய....
வானம் பார்த்த பூமியாய் இருக்கிறேன் இன்று
பாழாய்ப் போன நம் காதல்
மறு ஜென்மம் எடுக்காதா என்று.

ஒவ்வோர் நிமிடமும் மறக்க முயல்கிறேனடி–ஆனால்
உன் நினைவுகள் பீனிக்ஸ் போல உயிர்க்கின்றன
காதலில் புரிந்துணர்வு தேவை என்றுரைத்த நீயே
என்னைப் புரியாமல் பிரிந்தாயடி.........?


*V.பாஸ்கரன்*
*2ம் வருடம்*
*கலை கலாசாரபீடம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கிவிட்ட என் காதலில் ஒன்று மட்டும்
புரிந்து கொண்டேன்
முட்கள் நிறைந்த காதல் பயணத்தில்
காயப்படுவது கால்கள் மட்டுமல்ல
இதயங்களும் கூடத்தான்?
சுதந்திர கிளியாக சிறகடித்த என்னை
காதல் வலையில் சிக்க வைத்து
இன்பம் கண்டாய்
வானம் பார்த்த பூமியாய் இருக்கிறேன் இன்று
பாழாயப் போன நம் காதல்
மறு ஜென்மம் எடுக்காதா என்று.

ஒவ்வோர் நிமிடமும் மறக்க முயல்கிறேனடி-ஆனால்
உன் நினைவுகள் பீனிக்ஸ் போல உயிர்க்கின்றன
காதலில் புரிந்துணர்வு தேவை என்றுரைத்த நீயே
என்னைப் புரியாமல் பிரிந்தாயடி

*எ.பாஸ்கரன்*
*2ம் வருடம்*
*கலை கலாசாரபீடம்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகம்..........

பாசம் பல விதம் – அதில்
சகோதர பாசமே ஒருவிதம்
பாசத்தை புரியாதவர்கள் கயவர்கள் –இவர்கள்
பணிபற்ற மனதுடையவர்கள்

மற்றவர் மனதை அறியாதவர்
சொல்லி அடிக்கும் வார்த்தையால்
சொல்லாமல் பிறப்பது சந்தேம்–இது
மனிதனால் பிறக்கும் கண்கள் இரண்டும்
புண்களாக மாறும் போது பிறக்கும்


மனிதனை பிடிக்கும் எயிட்ஸ் நோய்– இது
அவனை மட்டும் மல்ல எம்மையும் மரணிக்க செய்யும்.
நட்பில் சந்தேகம் கொள்பவர்
மனிதர்கள் இல்லை நயவஞ்சகர்கள்

*சி. ஜெகன்*
*மெய்யியல் சிறப்புக்கற்கை*
*இரண்டாம் வருடம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைத் தொட்டி

ஏ மானிடா கொஞ்சம் நில்!
உன் அமைதியென்னும் உள்ளப் பாதை எங்கே?
ஓ.. நீயும் பெருமை தழுவியதால் மூழ்கிவிட்டாயா?
பொறாமை அழுக்காய் மாறிவிட்டாயா
மானிடா உன் மனதை அன்பென்ற தூரிகையால்
எப்போது சுத்தப்படுத்த போகிறாய்......
நீ முயல்கிறாய் இல்லை
விமோசனம் இல்லாமல்
இவ்வுலகம் குப்பைத் தொட்டியாய் மாறிவிடும்
சிந்தித்து செயலாற்று.



ஜெ.மோகனரூபா,
3ம் வருடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் பிரிவுத்துயர்..........

என் வாழ்வில் பிறக்கும் துயரங்கள்
வானில் மிதக்கும் முகிலாகியதே
வான்முகில் மட்டும் துளிநீராய் சிந்த—ஏன்
நம் நட்பு மட்டும் கண்ணீரால் நனைகிறது.....

எழுது எழுது என்று பேனா சொல்கிறது
எதை எழுதுவதென்று கைகள் துடிக்கிறது
அன்பு கொண்டு நம் நட்பை எழுதுவதா அல்லது
பிரிந்த நட்பின் துயரை எழுதுவதா.....

என்முகம் புன்னைகைக்கிறது நம்
பழகிய நாட்கள் கொஞ்சமே—தோழி
நீ பேசிய வார்த்தைகள் ஆழமானது
பேசிய நேரங்கள் சொற்பமே—ஆனால்
உணர்வினால் உணர்ந்த நட்பு உண்மையானது

உலகே ஓர் போர்க்கள மேடை அதில்
நான் போராடித் தேய்ந்தே போனேன்
இன்று வரை என்னில் எஞ்சியிருப்பது
நான் உன்மேல் கொண்ட நட்பு தோழி

ப.அனோஜா,
1ம் வருடம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பை உயிராக்க........

பல்கலைக்கழக சாலையில்
நம் நட்புகள் பொறித்த
இடத்திற்கு போனேன்
நீ அங்கு இருப்பாய் என– ஆனால்
அங்கு இன்னுமோர் நட்பு
துளிர் விட்டு மலர்ந்திருந்தது

கூடுவிட்டு கூடுபாயும்
உயிருக்கோ நிரந்தர இடமில்லை
நீ இருப்பாய் என
தேடி அலையும் எனக்கோர்
நிரந்தர நட்பில்லை



நம் நட்பு மலர்ந்த இடம்
நிழலாய் ஜொலிக்கிறது
உன் நினைவு என்னுடனே
நிழலாய் ஒலிக்கிறது
உயிரும் உனைத்தான்
உறவாய் கேட்கிறது

மீண்டும் நீதான் வரவேண்டும்
என் நிழலை நிஜமாக்க
உன் வரவுதான் தரவேண்டும்
நம் நட்பை உயிராக்க.......

க.சுகேந்திரன்
இறுதி வருடம்
கலைப்பீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத புதிர்.........

உனக்காகக் காத்திருந்த
சில நிமிடங்களில் உன் நினைவுகள்
எண்ணத் தெரிந்த
நினைவுகளாகி விட்டன.
எண்ணி எண்ணி பேசிய வார்த்தைகள்
எதிரில் நிற்க நினைத்தன.
தூங்கிப் போன எண்ணங்கள் துயரத்தில் வாடின.
உறங்கிப் போன உள்ளக் குமுறல்கள்
எங்கோ உரசிப் பார்க்கின்றன.
சிந்தித்து எனக்குள் சிதறிய
வார்த்தைகள் எனக்குள்ளே
சிறகொடிந்து போயின–அன்று
சிரித்து மகிழ்ந்த அந்த
சில நிமிடங்கள் என்னை
சிந்திக்க வைக்கின்றன.

குற்றமில்லாத என் உள்ளத்தில்
உன் நினைவுகள் மட்டும்
பசுமையாகி விட்டன–ஆனால்
பல மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற நீ
என்னை மறந்தாலும் என் பலமான
இதயத்துடிப்பில் உன் நினைவுகள்
சுவாசித்துக் கொண்டேயிருக்கும்.
புரியாத சில விடயங்கள் இன்னும்
புரியாத புதிராய் என்னுள்ளே!
பசுமையான உன் நினைவுகளை எண்ண
முடியவில்லை என்பது மட்டும்
என்னவோ உண்மை தான்!!!



*ஆ.சுதந்தினி*
*3ம் வருடம்,*
*புவியியல் சிறப்புக் கற்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் வலி.....

காதலின் வலி யார் அறிவார்
காதலின் வலி காதலித்தவனுக்குத்தான் தெரியும்
அவள்தான் என்னை பார்த்தாள்
அந்தப் பார்வை எனக்கு காதலாகத் தெரிந்தது
நானும் அவளை பார்த்து
காதல் எனும் வலையில் சிக்கினேன்

நான் பல்கலைகழகம் வந்தது குற்றமா.
நான் அவளைப் பார்த்தது குற்றமா.
நான் அவள் மீது காதல் கொண்டது குற்றமா.
இத்தனைக்கும் காரணம் நான் அவள் மீது கொண்ட அன்பு.
அன்பே நீ மறந்தாலும்
என் நினைவில் என்றும் நீ இருப்பாய்....!



*வ.நிரஷன்*
*மெய்யியில் சிறப்புக்கற்கை*
*2ம் வருடம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வார்த்தைகள்............

எமது நாளாந்த வாழ்வில் ஒவ்வொரு கணப் பொழுதிலும் எமது வாயிலிருந்து பல வார்த்தைகள் வெளியேறிக் கொண்டே இருக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் எந்த அளவுக்கு ஒருவரின் மனதைப் பாதிக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்ப்பது இல்லை. அவ்வாறு எண்ணிப் பார்த்தால் நாம் மற்றவர்களின் மனதினை புண்படுத்தக் கூடிய வகையில் சொற்பிரயோகத்தை பிரயோகிக்க மாட்டோம். வேதாகமம் கூறுகின்றது வார்த்தை எப்படி மனுஷனை தீட்டுப்படுத்தும் என
"வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்: அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" (மத்தேயு 15:18)

அதாவது வேதாகமம் கூறுகிறது நமது வாயினால் உண்ணுவது எல்லாம் வயிற்றுக்குள் போய் பின் ஆசனவழியாய் கழிந்து போகும் எனவும் வாயிலிருந்து புறப்படுகிறவை அனைத்தும் இருதயத்தில் இருந்து வருகின்றது. இவை அனைத்தும் மனுஷனைத் தீட்டுப்படுத்தும் எனக் கூறுகின்றது. யாராவது எமக்கு மனம் காயம்படக் கூடிய வகையில் வார்த்தைகளைக் கொட்டும் போது தான் அந்த வார்த்தையினால் ஏற்படும் வலியை அல்லது தாக்கத்தை உணரமுடியும். அதே வலியை பிறருக்கு நாம் கொடுப்பதால் உண்டாகும் நிலையை உணர்ந்து அவ்வழியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.
நாவிலிருந்து கொட்டப்பட்ட வார்த்தைகளை எப்போதும் மீள அள்ளிவிட முடியாது. நண்பர்களுடன் இணைந்து சொற்ப நேர சந்தோசத்துக்காக மற்றவர்களை தகாத வார்த்தைகளால் காயப்படுத்துதல் கூடாது. அந்த வார்த்தைகளால் மனதளவில் பாதிக்கப் பட்டவர்களின் நிலையினைச் சிந்திக்க வேண்டும்.
திருக்குறளில் "அடக்கம் உடைமை"என்ற அதிகாரத்தில் வார்த்தைகளினால் வரும் துன்ப நிலையை திருவள்ளுவர் எடுத்துக் காட்டுகின்றார்.
எடுத்துக்காட்டாக,
" தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதாவது ஒருவனுக்கு தீயினால் சுட்ட புண் காலப்போக்கில் ஆறிவிடும் ஆனால் வார்த்தைகளினால் ஏற்பட்ட மனப்புண் ஒருபோதும் ஆறாது என்கிறார். எமது வாழ்வில் நாம் நண்பர்களுடனோ அல்லது பிறருடனோ வார்த்தைப் பிரயோகம் செய்யும் போது யோசித்துக் கதைக்க வேண்டும். வார்த்தையைக் கொட்டிய பின் நான் இப்படிக் கதைத்திருக்கக் கூடாது என சிந்தித்தாலும் அதனால் எவ்விதமான பலனும் இல்லை.
இப் பல்கலைக்கழக வாழ்விலும் கூட வளாகத்தில் அறிந்தும் அறியாமலும் பல்வேறு சந்தர்ப்பத்தில் தவறான வார்த்தைகளை பேசிவிடுகிறோம். இது தவறா? சரியா? என தனிமையில் இருந்து யோசிக்கும் போது உண்மை புலப்படும். எனினும் மீண்டும் அதே தவறைச் செய்ய மனம் முயலும். இதனை நாமே தான் திருத்திக் கொள்ள வேண்டும். நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் எப்படி இருக்க வேண்டும் என திருவள்ளுவர் கூறுமிடத்து,
"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" என்கிறார். இதன் பொருள் யாதெனில் இனிய சொற்கள் எம்மிடம் இருந்தும் நாம் அவற்றைப் பேசாது பாவம் தரக் கூடிய சொற்களைக் கூறுகின்றோம். அதாவது இனிமையான சுவையான பழம் இருக்கும் போது அவற்றை உண்ணாது சுவையற்ற காய்களை உண்ணுவது போன்றது எனக் கூறுகின்றது. நல்ல வார்த்தைகள் இருக்கும் போதும் அவற்றை விடுத்து தீய வார்த்தைகளைப் பயன்படுத்தி விடுவது எமது இயல்பாகிவிட்டது. அதனை எவரும் மறுத்துரைக்க முடியாது.
இதுவரையும் எமது வாழ்வில் பலவிதமான தவறுதலான வார்த்தைகளை மற்றவர் மீது திணித்து இருக்கின்றோம். இதனால் எமது உறவினர்கள், நண்பர்கள் கூட எம்மைவிட்டுப் பிரிந்திருப்பர். எனவே எதைப் பேசப் போகிறோம், எப்படிப் பேசப் போகிறோம் என்பதைச் சிந்தித்து பேசினால் எவ்விதப் பிரச்சனைகளுக்கும் முகங் கொடுக்க வேண்டியேற்படாது.
யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு"
என்னும் குறளுக்கமைவாக வாழ்வோமாயின் எவ்விதப் பிரச்சனைகளையும் தவிர்த்து வாழலாம்.



ப.மைதிலி,
விடுகை வருடம்,
பொதுக் கற்கைநெறி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உன் முகவரிக்காக என் பயணம்.............**

மாலை நேரமிது
'மதி'யவள் மக்கள்
மனதை
வருடிவிட வருவதை
முற்கூட்டியறிந்த
பகல் நாயகி
பரிதியவள்
அழகு தனக்குரியதென்று
அகந்தை கொண்டு
சினத்தை வெளிப்படுத்த
செஞ்சிவப்பை
எச்சரித்த போதும்
சினத்தைத் தணித்து
மறைந்து விடுகிறாள்
இது ஏன்?
மதி மேலுள்ள
கோபத்தை
வெளிக்காட்டுவதாயில்லை
மனிதனுக்கும்
சில வேளை
சின மேற்படுவதியல்பு.
இதைத் தணிக்க
வேண்டுமென்று
சதா இந்த
நற்செய்தியை
நற்சித்திரமாக்கிக்
கொண்டிருக்கும்
நல்ல நேரமிதில்
வருணிக்க வார்த்தையில்லா
அழகில் வருகிறாள் மதியவள்.

அலைகள்
ஆங்காங்கே அடிக்கும்
கடலோரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பீரமாய் நின்ற
தென்னை மரமதில்
தலை சாய்த்து,
கால் நீட்டி
இருக்கிறாள் 'அவள்'
அன்னை அரவணைப்பில்
நானென்று
அவள் மடியில்
தலை சாய்த்து
அண்ணார்ந்த போது என்
கண்ணெதிரே
மதியவள் நீ !

உன்னை ஆதிகால
மனிதன் நோக்கினால்,
உன் மாற்றம்
காலநிலை மாற்றமாக.
ஆய்வாளன் நோக்கினால்,
ஆய்வுப் பொருளாக.
தாய் நோக்கினால்,
தன் குழந்தைக்கு உணவூட்டும்
காட்சிப் பொருளாக.
கவிஞன் நோக்கினால்
அடுத்துப் பிரசவிக்கும்
கவியின் கதாநாயகியாகத்
தெரிகின்ற நீ
ஏன்? எனக்கு மட்டும்
அவளாகவே தெரிகின்றாய்?!

உன் வானக் கூந்தலில்
சூடியிருக்கும் மலர்களை
பார்க்கும் போதெல்லாம்
அவள் கூந்தலில் இருக்கும்
வெட்கச் சிரிப்புக்களாக
என் எண்ண அலைகளில்!

விண்மீன்கள்
மின்னும் போதல்லாம்
மின்மினிப் பூச்சியின் எண்ணம்
அப்போதெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தலையில் சூடியிருக்கும்
மல்லிகைப் பூக்களிடையே
காதற் பரிமாற்றம் செய்ய
புரோக்கராய் செயற்பட்ட
பட்டாம் பூச்சிகளே
பறந்து திரிவதாய் எண்ணம்!

நிலவே நீ
அவளாகவே இருப்பதனால்
உனக்கும் என் காதற் கதைகளை
கடிதம் மூலமாவது
தெரிவிக்க ஆசைதான்—ஆனால்
உன் முகவரி தெரியவில்லை.

எத்தனை நாட்கள்
இராக் கனவாய் பகற் கனவாய்
கண்டதெல்லாம் – வெறும்
பகடைக் காய்களாய்.......
பாலைவனமாய் ....
ஆகிவிடக் கூடாதென்றெண்ணி
இன்றும் என் பயணம்
நிலாம்ஸ்ரோங்கை நோக்கி.......!!



ப. அனோஜா,
1ம் வருடம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழியும் இரவுகள்...

இரவுகளின் நீளம் இப்போதெல்லாம்—என்
தனிமையை எனக்கு உணர்த்துவதில்லை
படபடத்து வியர்த்து நனைந்து போகிறேன்
தினமும் பயத்தில்...
வீட்டிலிருந்தாலோ எப்போதும்
என்னையே பாவமாய்ப் பார்க்கும் அப்பா...
ஊரிலுள்ள கோயில்களுக்கெல்லாம்
நேர்த்தி வைத்தபடி அம்மா...
அண்ணா ஏனம்மா வீட்டுக்குள்ளேயே
இருக்கிறான் என்று கேட்கும் தம்பி...
தம்பிய கவனமாக இருக்கச் சொல்லுங்கோ
தொலைபேசியில் நள்ளிரவில் அக்கா...
உறவுகள் என்னால் துடிக்கும் துடிப்பு
அதிகாலை மணி ஆறுவரை...
இளமைக்கால இரவுகள் இப்படிக் கழிகையில்
பகல்களின் வேதனைகள் இன்னும்
கொடூரமாய் என்னைத்தாக்கிய படி!

அட்ஷயன்

மடோனா அச்சகம், செங்கலடி - 0602643755 / 0771801423/0774462919
E.mail:- madonna_printers@yahoo.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org